# வெள்ளோட்டில்
# காலிங்கராயன் தினம் கொண்டாட்டம்

ஈரோடு: காலிங்கராயன் கால்வாயை விவசாயிகளுக்கு பாசனத்திற்காக காலிங்கராயன் அர்ப்பணித்து 732 ஆண்டுகள் ஆனதை முன்னிட்டு சென்னிமலை அருகே வெள்ளோட்டில் காலிங்கராயன் தின விழா நடைபெற்றது.

விழாவுக்கு காலிங்கராயன் அறக்கட்டளை கவுரவ தலைவர் செ.ராசு தலைமை தாங்கினார். வெள்ளோடு பெருமாள் கோவில் திருப்பணிக்குழு தலைவர் கே.சின்னுசாமிக் கவுண்டர், காலிங்கராயன் பாசன சபை தலைவர் வி.எம்.வேலாயுதம், சென்னிமலை ஊராட்சி ஒன்றிய தலைவர் கே.ஏ.கருப்புசாமி உள்பட பலர் முன்னிலை வகித்தனர்.

காலிங்கராயன் அறக்கட்டளை துணைத்தலைவர் ரா.தட்சிணாமூர்த்தி காலிங்கராயன் கால்வாய் பற்றி அறிமுக உரையாற்றினார். விழாவில் தமிழக பொதுப்பணித்துறை அமைச்சர் கே.வி.ராமலிங்கம் கலந்து கொண்டு காலிங்கராயன் சிலைக்கு மாலை அணிவித்தார்.

கொங்கு நாடு முன்னேற்ற கழகத்தின் தலைமை நிலைய செயலாளர் சூரியமூர்த்தி தலைமையில் கட்சி தொண்டர்களும் காலிங்கராயன் சிலைக்கு மாலை அணிவித்தனர்.

விழாவில் காலிங்கராயன் வாரிசுதாரர்கள், ஊர் பொது மக்கள் மற்றும் காலிங்கராயன் அறக்கட்டளை நிர்வாகிகள், உறுப்பினர்கள் மற்றும் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். முன்னதாக காலிங்கராயன் அறக்கட்டளை தலைவர் என்.டி.கண்ணுசாமி வரவேற்று பேசினார். முடிவில் ராசா சுவாமி நற்பணி மன்ற நிறுவன செயலர் கே.டி.கொற்றவேல் நன்றி கூறினார்.